

கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் எம்.எல்.ஏ. அவர்கள், சாலை விபத்தில் மறைந்த திரைப்படத் தயாரிப்பாளர் ஆர்.பி.சௌத்ரி அவர்களின் திருவுடலுக்கு, சென்னை மயிலாப்பூரில் உள்ள அவரது இல்லத்திற்குச் சென்று மாலை வைத்து மரியாதைச் செலுத்தினார். அப்போது நடிகர் ஜீவா உள்ளிட்ட அவரது குடும்பத்தாருக்கு ஆறுதல் தெரிவித்தார்.

### தேர்தல் ஆணையம் ஒரு நேர்மையற்ற அமைப்பாக உள்ளது!

# மோசடிகள் மூலமே பா.ஜ.க. தேர்தல்களில் வெற்றி பெற்று வருகிறது!

## பீகார் முன்னாள் முதல்வர் தேஜஸ்வி குற்றச்சாட்டு!

பீகார்,மே,8-

தேஜஸ்வி வெளியிட்டுள்ள சமூகவலை தளப் பதிவில், அரசு நிர்வாகத்தின் அனைத்து அமைப்புகளும், நிறுவனங்களும் பாஜகவின் கைகளில் உள்ளதாகவும், மோசடிகள் மூலமே பா.ஜ.க. தேர்தல்களில் வெற்றி பெறுகிறது என்றும், தேர்தல் ஆணையம் ஒரு நேர்மையற்ற அமைப்பாக உள்ளதாகவும் விமர்சித்துள்ளார். பா.ஜ.க. ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தத்திற்கு எதிராகப் போராடுவதைத் தொடர்வோம் என்றும், இனி வரும் காலங்களிலும் பா.ஜ.க.வின் அனைத்து மோசடிகள் மற்றும் சதித்திட்டங்கள் அனைத்தும் அம்பலப்படுத்தப்படும்



என்றும் அவர் தெரிவித்துள்ளார். பீகார் கடந்த ஆறு மாதங்களில் இரண்டு முதலமைச்சர்களைக் கண்டுள்ளதாகவும், முதல் ஆண்டு பதவிக்காலத்தின் 50 சதவீதம் ஏற்கனவே வீணாகிவிட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டி உள்ளார்.

பீகார் அரசின் கருவூலம் காலியாக உள்ளதை மறைத்து, உண்மையான பிரச்சினைகளிலிருந்து கவனத்தைத் திசைதிருப்பும் வகையில், என்கவுண்டர்கள், குடியிருப்புகளை இடிப்பது உள்ளிட்ட புல்டோசர் நடவடிக்கைகள் போன்ற நாடகங்களை அரசு தொடர்ந்து அரங்கேற்றி வருவதாகவும் தேஜஸ்வி குற்றம்சாட்டி உள்ளார்.

மோசடிகள் மூலமே பாஜக வெற்றி பெறும் தேஜஸ்வி விமர்சனம் அரசு நிர்வாகத்தின் அனைத்து அமைப்புகளும், நிறுவனங்களும் பா.ஜ.க.வின் கைகளில் உள்ளன மோசடிகள் மூலமே பா.ஜ.க. தேர்தல்களில் வெற்றி பெறுகிறது

தேர்தல் ஆணையம் ஒரு நேர்மையற்ற அமைப்பாக உள்ளது பாஜகஆர்எஸ்எஸ் சித்தாந்தத்திற்கு எதிராகப் போராடுவதைத் தொடர்வோம் இனி வரும் காலங்களிலும் பா.ஜ.க.வின் அனைத்து மோசடிகள், சதித்திட்டங்கள் அனைத்தையும் அம்பலப்படுத்துவோம் பீகார் கடந்த 6 மாதங்களில் 2 முதலமைச்சர்களைக் கண்டுள்ளது முதல் ஆண்டு பதவிக்காலத்தின் 50% ஏற்கனவே வீணாகிவிட்டது

பீகார் அரசின் கருவூலம் காலியாக உள்ளதை மறைத்து, உண்மையான பிரச்சினைகளிலிருந்து கவனத்தைத் திசைதிருப்பும் வகையில் என்கவுண்டர்கள், குடியிருப்புகளை இடிப்பது உள்ளிட்ட புல்டோசர் நடவடிக்கைகள் போன்ற நாடகங்களை பீகார் அரசு தொடர்ந்து அரங்கேற்றி வருகிறது

# மேற்குவங்கத்தில் ஆட்சி அமைப்பதற்கு முன்பே பா.ஜ.க.வினர் வன்முறை!

## தொடரும் வன்முறையால் பெரும் பதற்றம்!

கொல்கத்தா, மே.8-

மேற்குவங்கம் மாநிலத்தில் ஆட்சி அமைப்பதற்கு முன்பே பா.ஜ.க.,வினர் வன்முறையை அரங்கேற்றி வருவதால் பொது மக்கள் அச்சம் அடைந்துள்ளனர். மேலும், 3 நாட்களில் 3 திரிணாமுல் காங்கிரஸ் நிர்வாகிகள் படுகொலை செய்யப்பட்டுள்ளதால் பெரும் பரபரப்பு நிலவுகிறது.

மேற்குவங்கம் மாநிலத்தில் நடைபெற்ற சட்டப் பேரவை தேர்தலில், தேர்தல் ஆணையத்தின் உதவியுடன் பா.ஜ.க., வெற்றி பெற்றது. இந்நிலையில், ஆட்சி அமைப்பதற்கு முன்பே மாநிலத்தில் அக்கட்சியினர் பயங்கர வன்முறையை கட்டவிழ்த்து விட்டுள்ளனர். வன்முறை தொடரும் நிலையில் இது வரை 433 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளனர். வன்முறை தொடர்பாக 200க்கும் மேற்பட்ட வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தேர்தல் வெற்றி கொண்டாட்டம் என்ற பெயரில் மேற்குவங்கம் முழுவதும் பா.ஜ.வி.,னர் வன்முறை வெறியாட்டத்தால் பொதுமக்கள் மிகுந்த அச்சமடைந்துள்ளனர். கொல்கத்தாவில் உள்ள இறைச்சி கடைகளை பா.ஜ.க. வினர் புல்டோசர் மூலம் இடித்ததால் பதற்றம் ஏற்பட்டுள்ளது. திரிணாமுல் காங்கிரஸ் அலுவலகம் மீது பா.ஜ.க.,வினர் தாக்குதல் நடத்தியது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. வன்முறை சம்பவங்கள் அரங்கேறிய போது, மத்திய பாதுகாப்பு படையினர் அமைதியாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்ததாக புகார் எழுந்துள்ளது. மேற்குவங்கம் மாநிலத்தில் ரத்தக் கறையோடு அரங்கேறும் அதிகார மாற்றம் பொது மக்களிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இடதுசாரிகள் மற்றும் ஜனநாயக சக்திகள் மீதான பாசிச பாஜகவின் திட்டமிட்ட தாக்குதலுக்கு கண்டனம் எழுந்துள்ளது.

முர்ஷிதாபாத்தில் லெனின் சிலையை உடைத்த பா.ஜ.க.,வினர்

சுவேந்து அதிகாரியின் உதவியாளர் மர்ம நபர்களால் சுட்டுக்கொலை இதனிடையே முர்ஷிதாபாத் மாவட்டத்தில் அமைந்துள்ள லெனின் சிலையை பா.ஜ.க.,வினர் உடைத்ததால் பரபரப்பு ஏற்பட்டது. பா.ஜ.க.,வினரின் இந்த வன்முறை செயலுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், பா.ஜ.க. முதலமைச்சர் வேட்பாளர் சுவேந்து அதிகாரியின் உதவியாளர் நேற்று முன்தினம் இரவு மர்ம நபர்களால் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளது பதற்றத்தை மேலும் அதிகரித்துள்ளது.

### 10,000+ கி.மீ. வரை கண்டம் விட்டு கண்டம் பாயும்

# ‘அக்னி 6’ ஏவுகணை சோதனை நடத்த தயார்!

புதுடெல்லி, மே.8-

பத்தாயிரம் கி.மீ. வரை கண்டம் விட்டு கண்டம் பாயும் அக்னி6 ஏவுகணை வரலாறு படைக்க தயாராக உள்ளது என்று பாஜக தெரிவித்துள்ளது. இந்தியாவின் முதல் கண்டம் விட்டு கண்டம் பாயும் ‘அக்னி6’ ஏவுகணையை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (டிஆர்டிஓ) வடிவமைத்துள்ளது.

இந்த ஏவுகணை சோதனையை நடத்த தயாராக இருப்பதாகவும், அரசின் அனுமதிக்காக காத்திருப்பதாகவும் டிஆர்டிஓ தலைவர் சமீர் வி.காமத் சமீபத்தில் கூறியிருந்தார்.

இந்நிலையில், பாஜக தனது அதிகாரப்பூர்வ எக்ஸ் சமூக வலைதளப் பக்கத்தில் நேற்று வெளியிட்ட பதிவில், “அக்னி6 வல்லரசு பாதையை நோக்கி இந்தியா முன்னேறுகிறது.





10,000+ கிமீ தூரம் பாயும் திறன் மற்றும் எம்ஐஆர்வி தொழில்நுட்பத்துடன், அக்னி6 வரலாறு படைக்கத் தயாராக உள்ளது.

இந்த ஏவுகணை இந்தியாவின் பாதுகாப்பை எதிரிகள் ஊடுருவ முடியாததாக மாற்றும். அத்துடன் உலகின் மிகவும் சக்திவாய்ந்த நாடுகளின் வரிசையில் நம்மை நிலைநிறுத்தும். வலிமையான இந்தியா, பாதுகாப்பான இந்தியா” என்று குறிப்பிட்டுள்ளது. மேலும் பாஜக பதிவேற்றிய ஒரு காணொலியில் கூறியிருப்பதாவது: இதுவரை அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய 5 நாடுகள் மட்டுமே கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை சக்தியைக் கொண்டுள்ளன.

இப்போது, இந்தியா அதே வரிசையில் தனது நிலையை வலுப்படுத்தப் போகிறது. அக்னி6 இந்தியாவின் அடுத்த தலைமுறை ஏவுகணையாகும். நீண்ட தூரம் சென்று தாக்கும் திறனுடன், இந்தியாவின் வலிமை பிராந்திய அளவில் மட்டுமல்லாமல் உலகளாவிய ரீதியிலும் விரிவடையப் போகிறது. இங்குதான் அடுத்த பெரிய மாற்றம் நிகழ்கிறது. ஒரு ஏவுகணை, பல இலக்குகள்

அதுவே எம்ஐஆர்வி தொழில்நுட்பம்.

இது ஒரே நேரத்தில் பல பணிகளைச் செய்யக்கூடியது. அமெரிக்கா, ரஷ்யா மற்றும் சீனா போன்ற நாடுகளிடம் மட்டுமே இருந்த இந்த சக்தி, இப்போது இந்தியாவுக்கும் கிடைத்துள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. எம்ஐஆர்வி தொழில்நுட்பம் என்பது, ஒரே ஒரு ஏவுகணை மூலம் வெவ்வேறு இலக்குகளுக்குப் பல அணு ஆயுதங்களை அனுப்ப அனுமதிக்கும் ஒரு நுட்பமாகும். இது தாக்குதல் திறனை அதிகரிப்பதுடன், எதிரி நாடுகளின் ஏவுகணை எதிர்ப்புத் தற்காப்பு அமைப்புகளை முறியடிக்கவும் உதவுகிறது.

